# குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், கரூர்.

**முன்னிலை:-** திரு.எஸ்.பி.பரத்குமார், எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

தமிழ் பராபவ வருடம், ஆவணி மாதம் 17 ஆம் நாள்,
2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆம் நாள், வியாழக்கிழமை,

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.48/2020**

| | | | |
|---|---|---|---|
| 1) | CNR Number | | **TNKR**02-000469-2020 |
| 2) | குற்றமுறையிடுபவர் மற்றும் எதிரி பெயர், விலாசம் | | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>கரூர்நகர காவல் நிலையம்,<br>கா.நி. குற்ற எண்.700/2019.<br><br>எதிரியின் மீது 387, 506(2) இதச பிரிவுகளின் கீழ்.<br><br>// எதிரி //<br>சூர்யா,<br>த/பெ கண்ணன்,<br>பழைய செக்குமேடு,<br>இந்தியன் ஸ்டோர்,<br>கரூர் மாவட்டம். |
| 3) | குற்றம் நடந்த நாள் | | 23.10.2019 |
| 4) | முறையிட்ட நாள் | | 24.10.2019 |
| 5) | முதல் தகவல் அறிக்கை பெறப்பட்ட நாள் | | 24.10.2019 |
| 6) | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | | 24.10.2019 |
| 7) | எதிரி முதன் முதலாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்ட நாள் | | 24.10.2019 |
| 8) | எதிரி பிணையில் விடப்பட்ட நாள் | | இல்லை |
| 9) | எதிரி காவலில் இருந்த நாட்கள் | | Already in Judicial Custody |
| 10) | குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | | 20.02.2020 |
| 11) | அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை-2,கரூர் அவர்களின் பெயர் | | செல்வி.முருகேஷ்வரி, |
| 12) | எதிரி தரப்பு வழக்கறிஞர் பெயர் | | திரு. C.பிரதீப், |
| 13) | எதிரியிடம் கு.வி.மு.ச. 240-பிரிவின்படி கேள்வி | | 02.04.2026 |

| | | | |
|---|---|---|---|
| | கேட்கப்பட்ட நாள் | | |
| 14) | நீதிமன்றத்தால் எதிரி மீது சாட்டடப்பட்ட குற்றச்சாட்டு | | எதிரியின் மீது 387, 506(2) இதச பிரிவுகளின் கீழ். |
| 15) | எதிரியின் பதில் | | எதிரி குற்றச்சாட்டை மறுத்தார். |
| 16) | சாட்சிகளை முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | | (see table below) |
| 17) | அனைத்து பலதரப்பட்ட மனுக்களும் கோப்பிற்கு எடுக்கப் பட்ட நாள் -அவற்றிற்கான முடிவு, (மேல் நீதிமன்றங்களில் சேலஞ்ச் மனுக்கள் உட்பட) (routine மனுக்கள் கு.வி.மு.ச.317 போன்றவற்றை தவிர்த்து) | | இல்லை |
| 18) | எதிரியை கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின்படி வினவப் பட்ட நாள் | | 25.08.2026 |
| 19) | தலை மறைவு எதிரிகள் யாராவது இருப்பின் அவர் ஆஜரான நாள், ஆஜர் படுத்தப்பட்ட நாள் போன்ற விவரங்கள் | | இல்லை |
| 20) | உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள stay மனு மற்றும் அதில் பிறப்பிக்கப்பட்ட முடிவு | | ஏதுமில்லை. |
| 21) | வழக்கில் விசாரணைக்காக உத்தரவிடப்பட்ட நாள் | | 03.04.2020 |
| 22) | விசாரணை முடிவுற்ற நாள் | | 31.08.2026 |
| 23) | நடுவரின் தீர்மானம் | | எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை. |
| 24) | முடிவு | | எதிரி குற்றம் சாட்டப்பட்டபடி குற்றவாளி இல்லை என முடிவு செய்யப்பட்டது. |
| 25) | எதிரிக்கு, இத்தீர்ப்பாணையின் இலவச நகல் வழங்கப்பட்ட நாள் | | அவ்வாறான சந்தர்ப்பம் எழவில்லை. |
| 26) | தீர்ப்பு நாள் | | 03.09.2026 |

Item 16 table:

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1 | 13.07.2026 | இல்லை |
| அ.சா.2 | 13.07.2026 | இல்லை |
| அ.சா.3 | 19.08.2026 | 19.08.2026 |

**தீர்ப்புரை**

1) கடந்த 23.10.2019ம் நாள் இரவு 22.30 மணியளவில் கரூர்நகர காவல்நிலைய சரகம் கரூர் வஞ்சியம்மன் கோவில் கீரைக்காரத்தெரு அய்யப்பன் மளிகை கடை அருகே இவ்வழக்கின் வாதி கணேசன் என்பவர் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரி சூர்யா என்பவர் வாதியிடம் குடிக்க பணம் கொடுடா என்று கேட்டதற்கு வாதி தன்னிடம் பணம் இல்லை என்று கூறியதற்கு இப்பத்தான் வேலை முடித்து வர்ற உன்னிடம் பணம் இல்லை என்று சொல்கிறாயா என்று கூறி எதிரி அவரது இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வாதியின் கழுத்தில் வைத்து நான் யார் தெரியுமா பெரிய ரவுடி எனவும் என் மேல் போலிஸ் நிலையத்தில் எத்தனை கேஸ் இருக்கிறது தெரியுமா ஒழுங்கா பணத்தை எடுடா என கொலைமிரட்டல் விடுத்து பணம் ரூ.300/-ஐ பிடுங்கி சென்றுள்ளார். எனவே இவ்வழக்கின் எதிரி சூர்யா என்பவரின் செய்கையானது சட்டப்பிரிவு 387, 506(2) இ.த.ச. பிரிவுகளின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கரூர்நகர காவல்நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல்நிலைய குற்ற எண்.700/2019ல் எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குற்றப்பத்திரிக்கை இந்நீதிமன்றக்கோப்பில் இவ்வழக்காக சி.சி.எண்.48/2020 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) மேற்படி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், கு.வி.மு.ச.207-ஆவது பிரிவுபடி எதிரிக்கு வழங்கப்படவேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3) எதிரி மீதான குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக்கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறினார். இருதரப்பும் கேட்டும், இவ்வழக்காவணங்களை ஆராய்ந்தும், எதிரியின் மீது 387, 506(2) இதச பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வாசித்து, விளக்கிக் கூறி வினவிய போது எதிரி குற்றங்களை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறினார். எனவே இவ்வழக்கில் சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது மற்றும் இவ்வழக்கில் அரசு சான்றுப்பொருள் அ.சா.பொ.1

ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-</u>**

i) இவ்வழக்கில் **அ.சா.1**, தனது சாட்சியத்தில், "நான் கரூர், வஞ்சியம்மன் கோவில் தெருவில் குடியிருந்துகொண்டு லோடுமேனாகவும், வியாபாரமும் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது தெருவில் வசிக்கும் நபர் ஆவார். இந்த வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சம்பவத்தின்போது நான் வேலைக்கு சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வழக்கில் **அ.சா.2**, தனது சாட்சியத்தில், "நான் கரூர், வஞ்சியம்மன் கோவில் தெருவில் குடியிருந்துகொண்டு துணி தேய்க்கும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது தெருவில் வசிக்கும் நபர் ஆவார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அதில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. **அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையொப்பம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் முறையே அ.சா.ஆ.1 மற்றும் 2.** என் முன்னிலையில் போலிசார் யாரையும் விசாரிக்கவில்லை. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என சாட்சியமளித்துள்ளார்.

iii) இவ்வழக்கில் **அ.சா.3**, தனது சாட்சியத்தில், **"**நான் தற்போது கரூர்நகர காவல்நியைலத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் பிரபாகரன், என்பவருடன் பணிபுரிந்த வகையில் அவருடைய கையொப்பம் எழுத்து நடை நன்கு பரிட்சயம் என்பதால் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 24.10.2019 ம் தேதி கரூர்நகர காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் பிரபாகரன் நிலையப் பொறுப்பில் இருந்தபோது, கணேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலைய கு.எண்.700/19, ச.பி.387, 506(2) இதசவின்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **கணேசன் கொடுத்த அந்த புகார் அ.சா.ஆ.3, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4.** பின்னர் வழக்கினை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் தனது புலன் விசாரணைக்கு

எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 09.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சி கந்தசாமி, வீரமணி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.5 மற்றும் 6.** பின்னர், சாட்சிகள் கணேசன், சரவணன், கந்தசாமி, வீரமணி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு போலிசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது கரூர் லைட்ஹவுஸ்கார்கனர் பஸ்டாப் அருகில் நின்றிருந்த எதிரி சூர்யாவை பிடித்து விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கணேசன், குணசேகரன் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். பின்னர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி கணேசன் என்பவரை மிரட்ட பயன்படுத்திய கத்தியை எடுத்து ஆஜர் செய்ததை மேற்கண்ட சாட்சிகள் கணேசன், குணசேகரன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியான **"நான் கணேசனை மிரட்ட பயன்படுத்திய கத்தியை எனது இடுப்பில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து தங்களிடம் ஆஜர் செய்கிறேன் என்னை அழைத்து சென்றால் சம்பவ இடத்தை அடையாளம் காட்டுகிறேன்" என்கிற அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7. அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.8.** பின்னர் கணேசன், குணசேகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரியை காரணம் கூறி கைது செய்து தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். வழக்குச்சொத்தைப் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.9. அந்த கத்தி அ.சா.பொ.1.** இத்துடன் உதவி ஆய்வாளர் பிரபாகரன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்" என சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சி விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

6) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்குப் பாதகமான சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச.313(1)(ஆ)-ஆவது பிரிவின்படி எடுத்துக்கூறி வினவியபோது எதிரி அவற்றை பொய்சாட்சி, பொய் வழக்கு என்றார். எதிரி தன்னுடைய தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரும் இல்லை என்றார். இத்துடன் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் முன் வைக்கப்பட்ட

வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரியின் மீது 387, 506(2) இ.த.ச பிரிவுகளின் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டை அரசுதரப்பால் தகுந்த முறையான ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

<u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>

9) அரசு தரப்பில், கடந்த 23.10.2019ம் நாள் இரவு 22.30 மணியளவில் கரூர்நகர காவல்நிலைய சரகம் கரூர் வஞ்சியம்மன் கோவில் கீரைக்காரத்தெரு அய்யப்பன் மளிகை கடை அருகே இவ்வழக்கின் வாதி கணேசன் என்பவர் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரி சூர்யா என்பவர் வாதியிடம் குடிக்க பணம் கொடுடா என்று கேட்டதற்கு வாதி தன்னிடம் பணம் இல்லை என்று கூறியதற்கு இப்பத்தான் வேலை முடித்து வர்ற உன்னிடம் பணம் இல்லை என்று சொல்கிறாயா என்று கூறி எதிரி அவரது இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வாதியின் கழுத்தில் வைத்து நான் யார் தெரியுமா பெரிய ரவுடி எனவும் என் மேல் போலிஸ் நிலையத்தில் எத்தனை கேஸ் இருக்கிறது தெரியுமா ஒழுங்கா பணத்தை எடுடா என கொலைமிரட்டல் விடுத்து பணம் ரூ.300/-ஐ பிடுங்கி சென்றுள்ளார். எனவே இவ்வழக்கின் எதிரி சூர்யா என்பவரின் செய்கையானது சட்டப்பிரிவு 387, 506(2) இ.த.ச. பிரிவுகளின் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கரூர்நகர காவல்நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல்நிலைய குற்ற எண்.700/2019ல் எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

10) இவ்வழக்கில் நிகழ்வுநிலை புகார்தாரரான கணேசன் என்பவர் இறந்துவிட்டதாக அவரின் இறப்புச்சான்றிதழானது காவல் ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கில் நிகழ்வுநிலை புகார்தாரர் இறந்துவிட்ட சூழ்நிலையில் அவர் தெருவில் வசிக்கும் சரவணன் என்பவர் அரசுதரப்பில் அ.சா.1 ஆக முன்னிருத்தப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.1 தனது முதல்விசாரணை சாட்சியத்தில், “நான் கரூர், வஞ்சியம்மன் கோவில் தெருவில் குடியிருந்துகொண்டு லோடுமேனாகவும்,

வியாபாரமும் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது தெருவில் வசிக்கும் நபர் ஆவார். இந்த வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சம்பவத்தின்போது நான் வேலைக்கு சென்றுவிட்டேன்" என்று கூறியுள்ளார்.

11) மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தை ஆராய்கையில், இந்த வழக்கு சம்பவத்தைப் பற்றி தனக்கு தெரியாது என்றும் சம்பவ தினத்தன்று தான் வேலைக்கு சென்றுவிட்டதாகவும் கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளநிலையில் மேற்படி சாட்சியமானது எதிரி மீதான குற்றச்சாட்டினை தீர்மானிக்க போதுமானதாக அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே இவ்வழக்கின் எதிரி தான் செய்த குற்றத்தை தன்னிச்சையாக ஒப்புக்கொண்டு தன் முன்னிலையில் ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்ததாகவும் அந்த ஒப்புதல்வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் நிகழ்வுநிலை புகார்தாரரான காலம்சென்ற கணேசனிடமிருந்த பறித்துச் சென்ற பணத்தை தன் முன்னிலையில் எதிரி ஆஜர்படுத்தினார் என்றும் சாட்சியம் அளித்துள்ள ஒப்புதல்வாக்குமூல சாட்சியான குணசேகரன் என்பவர் அரசுதரப்பில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அவரது சாட்சியம் இவ்வழக்கினை தீர்மானிக்க மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

12) இவ்வழக்கின் ஒப்புதல்வாக்குமூல சாட்சியான அ.சா.2 குணசேகரன் தனது முதல்விசாரணை சாட்சியத்தில், ஆஜர் எதிரி எனது தெருவில் வசிக்கும் நபர் ஆவார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல்வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அதில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. என் முன்னிலையில் போலிசார் யாரையும் விசாரிக்கவில்லை. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன்" என்று கூறியுள்ளார்.

13) மேற்படி அ.சா.2ன் சாட்சியத்தை ஆராய்கையில், மேற்படி அ.சா.2, தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் அதில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் தனக்கு தெரியாது என்றும் தன் முன்னிலையில் போலிசார் யாரையும் விசாரிக்கவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில்

வைத்து கையொப்பம் செய்ததாகவும் கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி கூற்றினை கவனமாக பரிசீலிக்கையில், மேற்படி அ.சா.2 தனது முதல்விசாரணை சாட்சியத்தில், எதிரி தன் முன்னிலையில் தான் செய்த குற்றத்தை தன்னிச்சையாக ஒப்புக்கொண்டு ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார் என்றோ தன் முன்னிலையில் நிகழ்வுநிலை புகார்தாரரின் திருடுபோன பணத்தை எடுத்து ஆஜர் செய்தார் என்றோ குறிப்பாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மாறாக போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் மேற்படி ஒப்புதல்வாக்குமூலத்திலும் மற்றும் கைப்பற்றுதல்மகசரிலும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி கூற்றிலிருந்து அ.சா.2, போலிசார் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த ஒப்புதல்வாக்குமூலத்தில் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் மட்டும் செய்துள்ளார் என்பதும் தெரியவருகிறது. மேற்படி கூற்றிலிருந்து இவ்வழக்கின் மிகவும் முக்கியமான ஒப்புதல்வாக்குமூல சாட்சியே பிறழ்சாட்சியாகிவிட்ட சூழ்நிலையில் இவ்வழக்கின் உண்மைத்தன்மை மீது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

14) அடுத்ததாக இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சார்பாக அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட காவல் உதவி ஆய்வாளர் திரு.இளங்கோவன், இவ்வழக்கு குறித்து புலன் விசாரணை செய்த ஆவணங்களின் அடிப்படையில் எதிரியின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ள போதிலும், இவ்வழக்கின் புகார்தாரர் இறந்துவிட்ட சூழ்நிலையில் புகார்தாரரின் தெருவில் வசிக்கும் நபரான அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட சரவணன் என்பவர் இந்த வழக்கு சம்பவத்தை பற்றி தனக்கு தெரியாது என்றும் சம்பவ தினத்தன்று தான் வேலைக்கு சென்றுவிட்டதாகவும் கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளநிலையில் இவ்வழக்கின் மிக முக்கியமான ஒப்புதல்வாக்குமூல சாட்சியான அ.சா.2 குணசேகரன் என்பவரும் தனது சாட்சியத்தில், எதிரி தன் முன்னிலையில் தான் செய்த குற்றத்தை தன்னிச்சையாக ஒப்புக்கொண்டு தன் முன்னிலையில் புகார்தாரரின் திருடுபோன பணத்தை தன் முன்னிலையில் எடுத்து ஆஜர் செய்தார் என்று குறிப்பாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை மாறாக போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் ஒப்புதல்வாக்குமூலத்திலும் மற்றும் கைப்பற்றுதல்மகசரிலும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்ததாக கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி குற்றவாளி என முடிவு செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு

சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15) முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீது சாட்டப்பட்ட 387, 506(2) இ.த.ச பிரிவுகளின் கீழ் படியான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை கு.வி.மு.ச.248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

16) இவ்வழக்கில் வழக்குச்சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண்.308/2019** ல் கண்டுள்ள **அ.சா.பொ.1** ஆன சுமார் 27.5 செ.மீ நீளமுள்ள கருப்புநிற பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்றினை மேல்முறையீட்டுக் காலக்கெடுவிற்குப் பின் உரிய முறையில் அழிக்க இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் வடிக்கப்பட்டு, பின்னர் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 03.09.2026 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.09.03 19:43:57 +0800

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் :-</u>

| **அரசுதரப்பு சாட்சிகள்** | **சாட்சிகளின் பெயர்** | **விவரம்** |
|---|---|---|
| அ.சா.1 | சரவணன் | கேள்விநிலை சாட்சி |
| அ.சா.2 | குணசேகரன் | ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல்மகசர் சாட்சி |
| அ.சா.3 | திரு.இளங்கோவன், காவல் உதவி ஆய்வாளர் | புலன்விசாரணை அதிகாரி(சார்பு) |

**<u>அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்:-</u>**

| **அரசுதரப்பு ஆவணங்கள்** | **ஆவணங்களின் விவரம்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | ஒப்புதல்வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.2 | கைப்பற்றுதல்மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | புகார் | அ.சா.4 |
| அ.சா.ஆ.4 | முதல்தகவல் அறிக்கை | அ.சா.4 |
| அ.சா.ஆ.5 | பார்வை மகசர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.6 | மாதிரிவரைபடம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.7 | ஒப்புதல்வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.4 |
| அ.சா.ஆ.8 | கைப்பற்றுதல்மகசர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.9 | படிவம் 91 | அ.சா.4 |

**<u>அரசுதரப்பு சான்றுப்பொருள் :-</u>**

| **அரசுதரப்பு சான்றுப்பொருள்** | **சான்றுப்பொருளின் விவரம்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது** |
|---|---|---|
| அ.சா.பொ.1 | சுமார் 27.5 செ.மீ நீளமுள்ள கருப்புநிற பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய கத்தி-1 | அ.சா.3 |

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள்கள் :-</u>**

**இல்லை**

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.09.03 19:44:13 +0800

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

| | | |
|---|---|---|
| 03.09.2026<br><br>**சிசி.எண்.48/2020**<br><br>எதிரி ஆஜர். இவ்வழக்கில் முன் வைக்கப் பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.<br><br>தீர்ப்பு அவையறியப் பகரப்பட்டது.<br><br>முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீது சாட்டப்பட்ட 387, 506(2) இ.த.ச பிரிவுகளின் கீழ் படியான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை கு.வி.மு.ச.248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் வழக்குச்சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண்.308/2019** ல் கண்டுள்ள **அ.சா.பொ.1** ஆன சுமார் 27.5 செ.மீ நீளமுள்ள கருப்புநிற பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்றினை மேல்முறையீட்டுக் காலக்கெடுவிற்குப் பின் உரிய முறையில் அழிக்க இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.<br><br>BARATH KUMAR<br>Digitally signed by BARATH KUMAR<br>Date: 2026.09.03 19:44:35 +0800<br><br>**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்.** | | |